பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 106

12.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற பஞ்சாயத்து செயலாளர் கைது

புகார்தாரர் திரு.ராஜா, பெரியார் நகர், எமரால்டு, நீலகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்பந்ததாரராக உள்ளார். புகார்தாரர் நீலகிரி மாவட்டம் இதலார் ஊராட்சிக்குட்பட்ட ஒசட்டி கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டி முடித்து அதற்கான தொகையான ரூ.6,90,955/- க்கான பட்டியலை இதலார் ஊராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்திருந்தார். திரு.கார்த்திக், பஞ்சாயத்து செயலாளர், இதலார் ஊராட்சி, அவர்கள் மேற்கண்ட பணிக்கான தொகையின் பட்டியலை காசோலையாக பெற்றமைக்காக தனக்கு 5 சதவீத தொகை ரூ.35,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். பின்னர் லஞ்சப் பணத்தை ரூ.20,000/- குறைத்துள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை நீலகிரி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 12.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கார்த்திக், பஞ்சாயத்து செயலாளர் அவர்கள் ரூ.20,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 106
12.10.2026

PANCHAYAT SECRETARY ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Raja, residing at Periyar Nagar, Emarald, Nilgris district, is a contractor in Udhagamandalam Panchayat Union, the Nilgiris. The complainant had completed construction of water tank work at Osatty Village, Ithalar Panchayat and submitted bill amount of Rs.6,90,955/-. Tr.A.Karthick, Panchayat Secretary, Ithalar Panchayat demanded 5% of the bill amount from the complainant (approximately Rs.35,000/-) of the cheque as bribe and later reduced the amount to Rs.20,000/-. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Nilgris detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (12.10.2026). During trap proceedings, Tr.A.Karthick, Panchayat Secretary, demanded and received the bribe amount of Rs.20,000/- from the complainant. The accused was arrested and sent to judicial custody.